IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# வரலாற்றுப் பின்புலத்தில் இராசேந்திரச் சோழன்

பேராசிரியர் பா. முத்துச்சாமி
தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600 030.

ஆய்வுச்சுருக்கம்

சோழ மன்னர்களில் முதன்மையானவன் இராசராசன். அவனின் கோட்பாடுகள், சித்தாந்தங்கள், ஆளுமைகள், இனக்குழுவின் பண்பாட்டுக்கூறுகள் முதலியன தொடர்ச்சியாக மூன்று தலைமுறைக்கு கடத்திச் செல்லப்பட்டது. அப்படியொரு மாபெரும் அரசனாக விளங்கியிருக்கிறான் இராசராசன். இராசேந்திர சோழன் தந்தையின் கோட்பாடுகளையும் மேலும் தன் மகன்களுக்கும் அவரின் சிந்தனைகளை ஆட்சியியலில் எல்லா நிலைகளிலும் புகுத்தியுள்ளதை அறியலாம்.

திறவுச் சொற்கள்
ஆட்சியியல் - நிர்வாகம் ; பண்பாட்டுக்கூறுகள் - தலைநகரம் மாற்றம்

முன்னுரை

தமிழகம் பல்வேறு மன்னர்கள் ஆட்சி செய்த மாறுபட்ட பண்பாட்டு தன்மைகளைக் கொண்ட நாடாகும். தொன்மைக் காலம் தொட்டு இன்று அளவில் வீரம், காதல், பழக்க வழக்கங்கள், என்னும் வாழ்வியல் பண்புகளில் பெரிய மாற்றம் இல்லாமல் காணப்படுவதை மிகச் சிறந்த நிலவியல் கூறு எனத் துணியலாம்.

மன்னர்கள் தமிழையும்; அதன் இலக்கிய வடிவங்களையும் நன்கு உணர்ந்தவராகக் காணப்படுகிறார்கள். மொழியின் தனித் தன்மையையும், மக்களின் வாழ்வியலையும் செம்மைப்படுத்தும் காரணிகள் அம்மொழியில் தோன்றிய இலக்கிய வடிவங்களாக உள்ளன என்பது மிகையன்று. தொல்காப்பியம் மற்றும் அதற்கு முன்னர் தோன்றிய இலக்கியங்கள் தமிழரின் உலகியல் பார்வையை எடுத்து உரைப்பதில் முன்னிலையில் திகழ்வதை அறியலாம். இந்த தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் இளமை மாறாதத் தன்மையில் விளங்குவதற்கு முழுமுதற் காரணம் தமிழ் நிலத்தை ஆண்ட மன்னர்களே ஆவார்கள். இக்கருத்திற்கு நாம் வரக் காரணம் என்ன எனில், சிந்துவெளி நாகரிகம் குறித்துப் பல்நோக்கு நிலையில் ஆராய்ந்த ஹீராÞ பாதிரியார், சர் ஜான் மார்ஷல், ஐ. மகாதேவன் மற்றும் ரஷியா, பின்லாந்து நாட்டைச் சார்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் மொகஞ்சதாரோ நகரத்தில் வழங்கிய மொழி திராவிட மொழிகளின் தொடங்கம் எனத் துணிகின்றனர். மேலும் மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளும் கி.மு. இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துகளுக்கு இடையே நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன எனக் கருத்து உரைக்கிறார்கள். சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழ் நாகரிகத்திற்கும் தொடர்பு உண்டு என்பதே ஆய்வாளர்களின் பொதுவானக் கருத்தாகும். இதன் வழி தமிழ் இலக்கியம், தமிழ் பரம்பரை மன்னர்கள் இவர்களின் காலத்தை இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட ஒரு வரலாறாகப் பார்க்கப்பட்டாலும்; தமிழ் மொழியின் தொன்மை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதே எனத் துணியலாம். இதற்குப் பனம்பாரனார் 'கல்தோன்றி' எனக் கூறும் சான்று துணையாகத் திகழ்வதை அறிந்து கொள்ள வேண்டும். இந்நோக்கில் சோழப் பேரரசின் இரு நூறு ஆண்டுக்கால ஆட்சிக்கு

வித்திட்டவன் விசயாலயன் சோழன் (கி.பி. 850-71) முதல் மூன்றாம் இராசேந்திரன் (கி.பி. 1246-1279) வரை உள்ள காலத்தில் இராசேந்திர சோழன் ஒருவனே தன்னேரில்லாத் தலைவனாகத் திகழ்ந்து இருப்பது வரலாற்று ஆய்வாளர்கள் சான்றாதாரங்களுடன் நிறுவி உள்ளனர்.

இராசேந்திரச் சோழன் தோற்றம்

மாமன்னன் இராசஇராசனுக்குப் பிறந்தவன் மகா மாமன்னன் இராசேந்திரன். இவனின் இயற்பெயர்கள் அருள்மொழி, மதுராந்தகன் என ரசப்பேகன் குறித்து உள்ளன. இராசஇராசனுக்குப் பதினைந்து மனைவிகள் இருந்தனர். இராசேந்திரனைப் பெற்று எடுத்தவன். திரிபுவன மாதேவி ஆவாள். இவள் சேரர் குலத்தைச் சார்ந்தவள். மார்கழித் திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன் இராசேந்திரன். இவர்களின் முன்னோர்கள் எனக் குறிக்கப்படுகின்ற விசயாலயன் என்றும் மன்னனுக்குப் பழையாற்றில் ஓர் அரண்மனை இருந்துள்ளது. இராசஇராசனின் தமக்கையார் குந்தவையார், இராசராசனின் பாட்டியான செம்பியன் மாதேவியார். இவர்களின் வளர்ப்பில் வளர்ந்தவர் இராசேந்திரச் சோழன்.

இராசேந்திரச் சோழனின் வளர்ப்பு வரலாற்றை "இராசராசன் ஆட்சியில் நடந்த போர்களில் எல்லாம் இளவரசனாக இருந்த இராசேந்திரனுக்குப் பங்குண்டு. இராசேந்திரன் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் போர்த் திறத்திலும் அரசியலிலும் நன்கு பண்பட்டிருந்தான். இராசராசன் தன் ஒப்பற்ற மகனான இராசேந்திரனிடமே தனது முதுமைப் பருவத்தில் அரசியலை ஒப்படைத்தான். அவன் உயிருடன் இருந்தபோதே கி.பி. 1012 இல் இராசேந்திரனுக்கு முடிசூட்டினான். இராசராசன் தன் மகனான இராசேந்தினது மூன்றாம் ஆட்சி ஆண்டில் ஒரு தேவதானம் கொடுத்தான் என்று திருமுக்கூடல் கல்வெட்டுக்கள் கூறலால் என்க"1 என டாக்டர் மா. இராசமாணிக்கனார் இராசேந்திரனின் ஆளுமைக்குச் சான்றுகளை முன்வைத்து உரைக்கிறார். ராசராசனின் முழு நம்பிக்கைக்குரியவன் இராசேந்திரன் என்பது புலனாகின்றது. என இராசமாணிக்கனார் உரைக்கிறார். ஆயினும் குடவாயில் பாலசுப்பிரமணியன் "ஆடித் திருவாதிரை" எனும் கல்வெட்டு சான்றுகளைக் காட்டி நிறுவுகிறார். இவர்களின் கூற்று வழி

"திருவாதிரை" நாளில் பிறந்துள்ளான் என்பதைத் தெளிவுப்படுத்திக் கொள்ள இயலுகிறது.

இராசஇராசன் முப்பது ஆண்டுகள் ஆட்சி செய்து உள்ளதாக இராசராாசனின் நான்காம் ஆண்டு கல்வெட்டு எடுத்துரைக்கிறது. இவனின் ஆட்சிக் காலம் முழுமைக்கும் பல்வேறு போர்களில் இராசேந்திரனுடன் போர் புரிந்து உள்ளான் என்பதை அறியமுடிகிறது. இராசேந்திரன் தனது ஐம்பதாவது வயதில் அரியணை ஏறி உள்ளான். அதுவரை தந்தை இராசஇராசனின் தோன்றாத் துணையாக இருந்துள்ளான்.

ஆயினும், இராசேந்திரசோழன் தன் மகன் இராசகேசரி (கி.பி.1018இல்) என்பவனுக்குத் தன் ஆட்சியின் ஏழாம் ஆண்டிலேயே முடி சூட்டிவிட்டான்.
இராசேந்திர சோழனுக்கு மூன்று மகன்கள் இராசாதிஇராசன், இராசேந்திர சோழ வேந்தன், வீரராசேந்திரன் என்பவர்கள் ஆவர். இராசராசனுக்கு ஒரே மகன் இராசேந்திரன். ஆனால் இராசேந்திரனுக்கு மூன்று மகன்கள். இராசேந்திரனுக்கு ராசராசன் மூடிசூட்டுவதில் போட்டிகள் இல்லை. அதனால் தன் வாழ்நாள் இறுதிக்காலத்தில் ராசராசன், இராசேந்திரனுக்கு முடி சூட்டி உள்ளான்.

இராசேந்திரன் மிகவும் திறமைப் படைத்த ராசாதிராசனுக்கு முடிசூட்டி உள்ளதை நோக்க வேண்டும்.

"மதுராந்தகன் (இராசேந்திரன்) போர் நுணுக்கங்களிலும் கல்வி கேள்விகளிலும், நாடாளும் திறமையிலும் அயல்நாட்டு வணிகக் கோட்பாடுகளிலும் நன்கு அனுபவமும் தேர்ச்சியும் பெற வேண்டும் என்பதற்காகவே அவரைப் பட்டத்து இளவரசராக அறிவிக்கும் நிகழ்ச்சிக்கு இராசஇராசன் காலம் தாழ்த்தி வந்தார்"2 எனக் கருத்து உரைப்பர் அமுதன் இவரின் ஆய்வுரை சிந்திக்கத்தக்கதாகும்.

இராசேந்திரச் சோழனின் தலைநகர் மாற்றம்

விசயாலயன் முத்தரையர்களை வென்று தஞ்சையில் தன் ஆட்சியை நிறுவினான். சோழர்களுக்கு முதல் தலைநகரம் முதன்மையான

நகரமாகத் திகழ்வது தஞ்சையே ஆகும். அவன் வழியில் ராசராசன் வரை தஞ்சையையே தலைமையமாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர்.

"பல்லவருக்கும், வரகுண பாண்டியனுக்குமிடையே நடந்த போரில் முத்தரையர்கள் பாண்டியருடன் இணைந்தனர். அப்போது விசயாலயன் பல்லவருக்குத் துணை நின்றான். போரில் விசயாலயன் வெற்றி கண்டான். தஞ்சாவூரைக் கைப்பற்றித் தன் ஆட்சிக்கு ஆக்கத்தையும் விரிவையும் தேடிக் கொண்டான். உறையூருக்கு அண்மையில் தன் கீழ் ஒரு குறுநில மன்னனாகத் திரை செலுத்தி முடங்கிக் கிடந்த விசயாலனின் கைகள் இவ்வெற்றியால் மிகவும் வலுவடைந்துவிடும் என்று பல்லவர்கள் எதிர்பார்த்தவர்களல்லர். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே ஈடிணையற்ற பெரும் புகழை ஈட்டிக் கொண்ட சோழப் பேரரசர் பரம்பரையொன்றைத் தான் தொடங்கி வைக்க இருந்ததை விசயாலயனும் கனவு கூடக் கண்டிருக்க மாட்டான்"3 என ஆய்வுரை வழங்கி உள்ளார் கே.கே. பிள்ளை. இவரின் கருத்து தொலைதூரப் பார்வைக் கொண்ட சோழ பேரரசரின் ஆட்சியை நன்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.
முதலாம் ஆதித்தன் (கி.பி.871-907) பராந்தகன் (கி.பி. 907-955), கண்டராதித்தன்
(கி.பி. 957), (அரிஞ்சயன், கி.பி. 957), சுந்தரசோழன் (கி.பி. 957-973) இரண்டாம் பரகேசரி ஆதித்தன், உத்தமசோழன், மாமன்னன் முதலாம் இராசராசன் (கி.பி.985-1014), முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044) இவர்களின் ஆட்சி வரை தஞ்சையே தலைநகராகத் திகழ்ந்துப் பின்பு முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1102), விக்கிரம சோழன் (கி.பி. 1120-1135) இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1135-50), இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1173) இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163-1179), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1216) மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1246) மூன்றாம் இராசேந்திரன் (கி.பி. 1246-1279). மேற்கண்ட குறிப்புகள் சோழப் பேரரசின் பரம்பரை ஆகும். இவர்களுடைய முதல் தலைநகரம் உறையூர், காவிரிப்பூம்பட்டினம், இரண்டாவது தலைநகரம் தஞ்சையாகும்.

மூன்றாம் தலைநகரம் கங்கை கொண்ட சோழபுரம் என்பதும் தெளிவாகிறது. "வரலாற்று நிகழ்வுகள் தனிமனித விருப்பங்களினால்

தீர்மானிக்கப்படுவதில்லை. அது ஒரு சமூகம் சார்ந்த ஒருமித்த விருப்பங்களால் நிகழ்த்தப்படும் நிகழ்வுகளின் தொகுப்பாகும். 'தலைவனின் எண்ணமும் மக்களின் விருப்பமும் கிடைமட்டத்தில் சமமாக இருக்கும் பட்சத்தில் அங்கு அமைதியான வாழ்வியற் சூழல் தோற்றம் பெறு'மென்ற மானுடவியல் கோட்பாட்டினை அப்படியே அடியொற்றியவர்கள் சோழ மன்னர்கள். அதனால் தான் அவர்களால் உருவாக்கப்பட்ட ஊர்கள், நகரங்கள் போன்றவை நிலவியலை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட போதிலும், மக்களின் இயக்கவியலின் அடிப்படையிலேயே அவைகள் வடிவமைக்கப்பட்டிருந்தையும் பார்க்க முடிகிறது. அதனால்தான் காலங்கள் கடந்தாலும் அப்பழம்பெரும் ஊர் மற்றும் நகரங்களால் வாழ்ந்து வரும் மக்கள் இன்று வரை அமைதியான வாழ்வியல் சூழலோடு வாழ்ந்து வருவதைச் சமகாலத்திலும் காணலாகிறது."4 என்னும் வரலாற்று ஆய்வாளர் ஜெ.ஆர். சிவராமகிருஷ்ணன் ஆய்வுரை எண்ணுதற்குரியதாகும்.

சோழ பேரரசினர் 433 ஆண்டுகள் தொடர்ந்து அரசு ஆட்சி செய்துள்ளனர். இப்பெருமைப் பாரத நாட்டில் இவர்களுக்கு மட்டுமே உரியது. இவற்றில் 255 ஆண்டுகள் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்துள்ளனர் என்பதை நோக்கும் நிலையில் இத்தலைநகரத்தின் அமைப்பை நன்கு உணரலாம். தலைநகரம் மாற்றம் குறித்து ஆய்வாளர்கள் யாரும் ஆய்வு மேற்கொண்டதாகப் புலப்படவில்லை. இருப்பினும் வரலாற்று ஆய்வாளர் ஜெ.ஆர். சிவராமகிருஷ்ணன் அவரின் நோக்கில் சில கருத்துரைகளை முன்வைத்துள்ளார். முறையே அவை:

- 'பாண்டியர்களின் தலைநகருக்கு மிக அருகில் தஞ்சை அமையப்பெற்றிருந்தது.
- தில்லைக் கூத்தனை முழுமுதற் கடவுளாகச் சோழர்கள் போற்றினார்கள்.கொள்ளிடம் ஆற்றில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவது.
- தில்லைக் கூத்தனைத் தொடர்ந்து வழிபடுவதற்கு மிகுந்த சிரமம் காணப்பட்டது.

- கடல் வாணிபம் மிகுந்த சிரமத்திற்கு உட்பட்டது.பரங்கிப்பேட்டை அருகில் வெள்ளாறு கலக்கும் இடமும்; கொள்ளிட ஆறு கலக்கும் இடத்திலும் மகேந்திரப்பள்ளி துறைமுகம் அமையப்பெற்று இருந்தது.
- வெள்ளாறு, கொள்ளிடம் ஆறு இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் தேவகோட்டை அமையப் பெற்று இருந்தது.
- இவ்ஆறுகள் கலக்கும் இடத்தில் கடல் நீரோட்டம் நன்கு அமையப் பெற்று இருந்தது.
- நாகப்பட்டினம் சோழர்களின் துறைமுகங்களில் சிறப்புப் பெற்று இருந்தது.
- சிதம்பரத்திற்கு அருகில் தேவகோட்டை பகுதியில் கடல் தளம் அமைக்க ஏதுவாகக் காணப்பட்டது.
- கங்கைகொண்ட சோழபுரம் மிகுந்த சமவெளி பரப்பாக இருந்தது.
- நகரத்தைப் பன்நோக்கு நிலையில் அமைத்துக் கொள்ள எல்லா வகையிலும் நிலவியல் நோக்கில் சிறப்பாக காணப்பட்டது"5

இராசேந்திரச்சோழன் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரமாக உருப்பெறும் வரை தில்லைக் கோயிலில் முக்கிய கூட்டங்களையும் அரசியல் ஆலோசனைகளையும் நடத்தியுள்ளார்.

'மயன்' தமிழர்களின் கட்டிடக்கலை மற்றும் கலைகளில் முதன்மையான அறிஞனாகக் கருதப்படுகிறார். இவர் வகுத்து அளித்த விதிகளின் வழியில் கங்கை கொண்ட சோழபுரம் என்றும் நகரத்தை வடிவமைத்து உள்ளான் இராசேந்திரச் சோழன். நகரத்தை வடிவமைக்கப் பத்து அலகுகள் சரியாக அமையப் பெறவேண்டும். இக்கூற்றினை முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடு எடுத்துரைக்கிறது. அவை:

- விவசாய உற்பத்திக்கு ஏற்ற தரமான மண்வளம்
- 21 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்புப் பகுதி
- நிரந்தர நீர் மேலாண்மைத் திட்டம்
- தண்ணீர் பகிர்மான அலகுகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு
- கட்டுமானத்திற்கு ஏற்ற தரமான மண்வளம்
- சமூகவியல் மையமாகக் கோயில் மற்றும் மண்டபங்கள்
- வாணிகப் பெருமக்கள்
- கருவி தயாரிப்போர்
- அறச் செயல்களுக்கான நிரந்தர வைப்பாக வழங்கப்பட்டத்தானங்கள்

- பொது இடுகாடு6

என்பனவாகும்.

மேற்கண்ட பத்துக் கட்டளைகளையும் கங்கை கொண்ட சோழபுரம் நகர அமைப்பில் முழுமையாகப் பின்பற்றி நகரத்தை உருவாக்கி உள்ளதை அறியமுடிகிறது.

தற்காலத்தில் பல்வேறு சமூக முன்னெடுப்புகளிலும் இராசேந்திரச் சோழனின் கோட்பாடுகளை முன்வைத்து வியப்புணர்வினை அரசுகள் மேற்கொள்வதை இங்கு ஒப்பு நோக்க வேண்டும். குறிப்பாக "மழைநீர் சேகரிப்பு திட்டம்" என்பதைப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே பின்பற்றிய இராசேந்திர சோழனின் நகர அமைப்பியல் கோட்பாடு எவ்வளவு உயர்வானது என்பதைப் புலப்படுத்திக் கொள்ள வேண்டும். 'மண்வளம் காப்போம்' என்பது உயிர் வாழ்வதற்கு முதன்மையானது ஆகும். இக்கருத்தில் இராசேந்திர சோழனே முன்னோடி என்பதையும் உள் வாங்கிக் கொள்வது நலம் பயக்கும்.

இராசேந்திரச் சோழனின் வெற்றிகளும் ஆட்சி முறையும்

இராசேந்திரச் சோழன் தந்தையை அடியொற்றி தன் அரசாட்சியை விரிவுபடுத்துவதில் மிக அதிக கவனம் செலுத்தி உள்ளான். வெற்றி கொண்ட பகுதிகளை இராசாதிராசனான தன் மகனைக் கொண்ட ஆட்சி புரிய செய்தது. அடுத்தத் தலைமுறையை எப்படி வழி நடத்த வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ள வேண்டும்.

இராசராச சோழன் தன்னுடைய செயலாற்றும் நிலையில் இராசேந்திர சோழனை வளர்த்தான் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இராசேந்திரனின் வெற்றிகளை அவனின் இருபத்து நான்காம் ஆண்டு ஆட்சிக் கல்வெட்டு (கி.பி. 1035-36) எடுத்துரைக்கிறது.

| அக்காலப் பெயர்கள் | | தற்காலப்பெயர்கள் |
|---|---|---|
| இடைதுறை நாடு | - | இராய்ச்சூர் |
| வனவாசி | - | பாணவாசி |
| கொள்ளிப்பாக்கை | - | ஐதராபாத் (குல்பர்கா) |
| மன்னைக் கடக்கம் | - | மானியதேகம் |
| ஈழம் | - | இலங்கை |
| பழத்தீவுகள் | - | மாலத்தீவுகள் |
| இரட்டபாடி ஏழரை இலக்கம் | - | மேலைச் சாளுக்க நாட்டின் ஒருபகுதி |

மாசுணிதேசம் - பாகிஸ்தானில் உள்ளது சிந்து மாகாணத்தில் உள்ள ஊர்.
ஆதி நகர் - ஜார்ஜ் நகர் ஒரிஸாவில் உள்ளது.
ஒட்ட விடியம் - ஒரிஸா
சீர் விசயம் - சுமத்திரா தீவில் உள்ளது.
மாயிடுடிங்கம் - மலேசியாவில் லீசாருக்கு அருகில் உள்ள ஊர்.
மானக்க வாரம் - நிக்கோபார்த் தொகுதியாகும்
கடாரம் - பெனாங்கை அடுத்துள்ள கோடா
ஆகிய பகுதிகளை வெற்றி கொண்டு இருப்பதை அறியலாம்.

"இராசேந்திரனின் வடநாட்டுப் படையெடுப்பானது ஒரு பெரும் திக்கு விசயமாகும். வடஇந்தியாவில் பல மன்னர்களை அவன் வென்று வாகை சூடினான்"8 என்றும்
கே.கே. பிள்ளை குறிப்பிடும் ஆய்வுரை நாம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.
அரசாங்க ஊழியர்கள் என்னும் அரசின் பின்புலத்தை உருவாக்கியதில் முன்னோடி ஆவான் இராசேந்திரசோழன். இவனுக்கு முன்பிருந்த மன்னர்கள் இம்முறையினைப் பின்பற்றி இருந்தாலும் அதனைச் செம்மைப்படுத்திய பெருமை இராசேந்திரனுக்கே உண்டு. தண்ட நாயகன் அப்பிமையனாகிய இராசேந்திரச் சோழப் பிரம்மராயன் முதலாக பருத்தியூர், கிழான், திங்கள், கொண்டான் என ஐம்பத்து ஒன்பது பெயர்கள் அரசு நிர்வாகத்தில் இடம் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள நாகல்லாபுரம், குருவாலப்பர் கோயில், மண்மலை, அணைக்குடம், கரடிக்குளம், கழுவந்தோண்டி, சின்னவனையம், கண்டியங்கொல்லை, கஞ்சிக்குழி, வீரபோகம், உட்கோட்டை, கடாரம் கொண்டான், இரும்புலிக்குறிச்சி, ஆயுதக்களம், யுத்தப்பள்ளம், சுண்ணாம்புக்குழி, மெய்க்காவல் புத்தூர், வாணதரையன் குப்பம், விரரெட்டித்தெரு, செங்கல்மேடு, கணக்கு வினாயகர் கோயில், கொசவன்மேடு, குலோத்துங்க சோழநல்லூர், மீன்சுருட்டி, மேம்புக்குடிவாசல், கொல்லன் குழி, ஆகிய ஊர்கள் கங்கைகொண்ட நகரத்தின் புறப்பகுதிகளாகக் காணப்படுகின்றன.

இராசேந்திரச் சோழன் ஆட்சி நிர்வாகத்தில் சிறந்து இருந்ததை அறியமுடிகிறது. பெரும்பகுதி, சிறுபகுதி, மிகச் சிறிய பகுதியென நிர்வாகத்தைப் பிரித்து ஆட்சிப் புரிந்து உள்ளான் சோழ மன்னன் இராசேந்திரச் சோழன்.

"கங்கை வெற்றியின் மூலமாக பர்மா வரையிலான வங்கக் கடல் பகுதியும், தமது கப்பற்படை வலிமையால் இலங்கை, பழந்தீவு பன்னிராயிரம், சாந்திமாத் தீவு போன்றவற்றைக் கைப்பற்றியதன் வாயிலாக ஒட்டுமொத்த இந்துமகா சமுத்திரமும் இராசேந்திரச் சோழனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவ்வெற்றிகளின் விளைவாக முக்கடற்பரப்பில் கடற் கொள்ளையர்களின் பயமின்றி அயலக வணிகர்கள் சோழ நாட்டோடு வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர். ஒட்டுமொத்த வங்கக்கடல் பகுதியும் இராசேந்திரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்ததால் இக்கடற்பரப்பில் சீனா, ஸ்ரீவிஜயம் போன்ற அரசுகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதன் மூலம் இராசேந்திரச் சோழன் காலத்தில் சோழப் பேரரசு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டிப் பொருளாதாரத்தில் தன்னிறைவைப் பெற்றிருந்தது"8 என்று பேராசிரியர் ஜெ.ஆர். இராமகிருஷ்ணனின் ஆய்வுரை இராசேந்திரச் சோழனின் நல்லாட்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

ஆய்வுரைகள்

1. இராசேந்திரச் சோழன் நிர்வாக வல்லமைப் படைத்த மன்னனாகத் திகழ்கிறான்.
2. சோழர் வரலாற்றில் தனித்த வரலாறு உடையவன் இராசேந்திரச் சோழன்.
3. சோழர்களின் போர் முறையிலும் பிறர் நாடுகளை வெற்றிக் கொள்வதிலும் தனித்து ஓங்கிக் காணப்படுகிறான் இராசேந்திரச் சோழன்.
4. தலைநகர் மாற்றத்தில் தொலைநோக்கு உடையவன் என்பது புலனாகிறது.
5. பொருளாதாரச் சிந்தனைகளில் தகுதியான உயர் நிலையை உருவாக்கியதில் சிறந்தவன் ஆகிறான்.

6. வரலாற்று ஆய்வாளர்கள் சோழர் காலம் பொற்காலம் எனக் கூறுவதற்கு இராசேந்திரச் சோழனே காரணமாகத் திகழ்ந்துள்ளான்.

## பார்வை நூல்கள்

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், 32-13, கிருஷ்ணா தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை-600 017.
2. அமுதம், தந்தையை விஞ்சிய ராஜேந்திர சோழனின் வெற்றி வரலாறு, மணிமேகலைப் பிரகரம், 7, (ப.எண்.4), தணிகாசலம் சாலை, தியாகராயர் நகர் சென்னை-17 முதற்பதிப்பு 2023.
3. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை-113, மறுமதிப்பு-2007, ப.249.
4. முனைவர் ஜெ.ஆர். சிவராமகிருஷ்ணன், நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு, அன்றில், எண். 845, புதிய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர், முதற்பதிப்பு மார்ச் 2023.

## சான்றெண் விளக்கம்

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பக்.164-165.
2. அமுதன், தந்தையை விஞ்சிய இராஜேந்திர சோழனின் வெற்றி வரலாறு, ப.27.
3. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை-113, மறுமதிப்பு 2007.
4. முனைவர் ஜெ.ஆர். சிவஇராமகிருஷ்ணன், நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு, பக்.1-2.
5. மேலது, பக்.2-7.
6. மேலது, ப.79.
7. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், பக்.275-277.
8. மேலது, ப.277.